


# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனிக்கிழமை, செப்டம்பர் 23, 2023 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 71

# சென்னை பெருநகர் காவல், தாம்பரம் மற்றும் ஆவடி காவல் ஆணையாளர்கள் உத்தரவின்பேரில், விநாயகர் சிலைகளை ஊர்வலமாக எடுத்து செல்லவும், கடலில் கரைப்பதற்கும் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது

சென்னை, செப்டம்பர் 23, 2023: 18.09.2023 அன்று விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி, சென்னை பெருநகர், ஆவடி மற்றும் தாம்பரம் காவல் ஆணையரக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விநாயகர் சிலைகளை நிறுவுவதற்கும், வழிபாடுகள் செய்வதற்கும் பின்னர் அவற்றை நீர் நிலைகளில் கரைப்பதற்கும், மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படியும், மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் அறிவுறுத்தல்படியும், தீயணைப்புத் துறை மற்றும் சம்பந்தப்பட்ட மாநகராட்சியினரின் தடையில்லா சான்றுகளுடன் காவல்துறை அறிவித்த கட்டுப்பாடுகளுடன் விநாயகர் சிலைகளை நிறுவ சென்னை பெருநகர காவல் ஆணையாளர், ஆவடி மற்றும் தாம்பரம் காவல் ஆணையாளர்கள் உத்தரவின்பேரில், கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் அறிவிக்கப்பட்டு அதன்பேரில், காவல்துறையின் கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு, அமைதியான முறையில் வழிபாடுகள் செய்யவும், பின்னர் காவல்துறை அறிவிக்கப்பட்ட நீர் நிலைகளில் சிலைகளை கரைப்பதற்கும், ஒத்துழைப்பு அளிப்பதாக உறுதி அளித்துள்ளதன்பேரில், சென்னை பெருநகர காவல் எல்லைக்குள் 1,519 விநாயகர் சிலைகள், ஆவடி காவல் ஆணையரக எல்லைக்குள் 204 விநாயகர் சிலைகள், தாம்பரம் காவல் ஆணையரக எல்லைக்குள் 425 விநாயகர் சிலைகள் என மொத்தம் 2,148 வைத்து வழிபாடு செய்ய அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் பல்வேறு அமைப்பினர் விநாயகர் சிலைகளை வைத்து வழிபாடு செய்து வருகின்றனர்.

வருகின்ற 23.09.2023 அன்று பாரதிய சிவசேனா அமைப்பினரும், 24.09.2023 அன்று இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளும் விநாயகர் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் சென்று அனுமதிக்கப்பட்டுள்ள கடற்கரை நீர்நிலைகளில் கரைக்கவுள்ளனர். பாதுகாப்பு ஏற்பாடுகள். சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.சந்தீப் ராய் ரத்தோர், இ.கா.ப., ஆவடி காவல் ஆணையாளர் திரு.கி.சங்கர், இ.கா.ப மற்றும் தாம்பரம் காவல் ஆணையாளர் முனைவர் அ.அமல்ராஜ், இ.கா.ப அவர்கள் உத்தரவின்பேரில், அமைதியான முறையிலும், எவ்வித அசம்பாவிதமும் நிகழாமல் விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் கரைக்கவும் சென்னை பெருநகரில் 16,500 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள், 2,000 ஊர்க்காவல் படையினரும், ஆவடி காவல் ஆணையரகத்தில் 2,080 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களும், தாம்பரம் காவல் ஆணையரகத்தில் 1500 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களும் என மொத்தம் 22,080 காவல் அதிகாரிகள், ஆளிநர்கள் மற்றும் ஊர்க்காவல் படையினருடன் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.




விநாயகர் சிலைகளை கரைக்க காவல்துறை அனுமதிக்கப்பட்ட நாட்களில் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்கள் மூலம் மட்டுமே விநாயகர் சிலைகள் கொண்டு செல்லப்பட்டு, அனுமதிக்கப்பட்ட சிலை கரைக்கும் இடங்களில் கரைக்கப்பட வேண்டும். சிலை கரைக்கும் இடங்களில் தற்காலிக கட்டுப்பாட்டறைகள் மற்றும் உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. சிலைகளை கரைப்பதற்கு கன்வேயர் பெல்ட். கிரேன்கள், படகுகள் உதவி கொண்டு சிலைகளை கரைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், சிலைகள் கரைக்கும் இடங்களில் அவசர உதவிக்கு தீயணைப்பு வாகனங்கள், ஆம்புலன்ஸ் வாகனங்கள், மோட்டார் படகுகள், நீச்சல் தெரிந்த தன்னார்வலர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும், அங்கு கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு பைனாகுலர்கள் மூலம் கண்காணித்தும், குதிரைப்படைகள் மற்றும் ஆல் டெரெய்ன் வாகனம் (பீச் பக்கீஸ்) மூலம் தீவிர ரோந்து பணிகள் மேற்கொண்டு கண்காணித்தும் குற்ற நிகழ்வுகள் மற்றும் அசம்பாவிதங்கள் நிகழாமல் கண்காணிக்க தக்க பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விநாயகர் சிலைகளை ஊர்வலமாக கொண்டு செல்லும் வழித்தடங்கள் மற்றும் கரைக்கும் இடங்கள் :

சென்னை பெருநகர காவல் ஆணையரகத்திற்குட்பட்ட 1.சீனிவாசபுரம், பட்டிணப்பாக்கம், 2.பல்கலைநகர், நீலாங்கரை, 3.காசிமேடு மீன்பிடி துறைமுகம், 4.திருவொற்றியூர், பாப்புலர் எடைமேடை பின்புறம் ஆகிய 4 கடற்கரை பகுதிகளில் விநாயகர் சிலைகள் கரைக்க காவல் துறையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில், சென்னை பெருநகரில் நிறுவியுள்ள விநாயகர் சிலைகளை மேற்படி 4 இடங்களில் கரைக்க சென்னையில் 17 வழித்தடங்கள் பிரத்யேகமாக வகைப்படுத்தப்பட்டு, அவ்வழியே விநாயகர் சிலைகளை கொண்டு சென்று சிலைகளை கரைக்க அனுமதி வழங்கப்பட்டு அதற்கான சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அதன்பேரில், சென்னை பெருநகரில் நுங்கம்பாக்கம், சிந்தாதரிப்பேட்டை, எழும்பூர், புதுப்பேட்டை, பெரம்பூர், வியாசர்பாடி, புளியந்தோப்பு, பட்டாளம், சௌகார்பேட்டை, அயனாவரம், திருவல்லிக்கேணி, மைலாப்பூர், தேனாம்பேட்டை, தி.நகர், எம்.ஜி.ஆர் நகர், வடபழனி, சைதாப்பேட்டை வில்லிவாக்கம், கொளத்தூர், திருமங்கலம், மதுரவாயல், கோயம்பேடு, அரும்பாக்கம் ஆகிய இடங்கள் மற்றும் இதன் சுற்றுப்புற இடங்களில் உள்ள விநாயகர் சிலைகள் குறிப்பிட்ட வழித்தடங்கள் வழியாக ஊர்வலமாக சென்று, பட்டிணப்பாக்கம், சீனிவாசபுரம் கடலில் கரைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதேபோல, அடையாறு, கிண்டி, ஆதம்பாக்கம், மடிப்பாக்கம் நங்கநல்லூர், வேளச்சேரி, திருவான்மியூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் வைக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைகள், நீலாங்கரை பல்கலை நகர் கடலிலும், வடசென்னை பகுதியான தங்கசாலை, வண்ணாரப்பேட்டை, இராயபுரம், தண்டையார்பேட்டை, ஆர்.கே.நகர், கொடுங்கையூர் மற்றும் மாதவரம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் வைக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைகள் காசிமேடு மீன்பிடி துறைமுகம் கடலிலும் கரைப்பதற்கும் திருவொற்றியூர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் வைக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைகள் திருவொற்றியூர், பாப்புலர் எடைமேடை பின்புறம் கரைக்க அனுமதி வழங்கப்பட்டு சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

தாம்பரம் காவல் ஆணையரக எல்லைக்குட்பட்ட விநாயகர் சிலைகள்

மேலும், தாம்பரம் காவல் ஆணையரகத்திற்குட்பட்ட மறைமலைநகர், கூடுவாஞ்சேரி, தாம்பரம், குரோம்பேட்டை, பல்லாவரம், திரிசூலம், மீனம்பாக்கம், குன்றத்தூர், அனகாபுத்தூர் மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்களில் வைக்கப்பட்டுள்ள சிலைகள் 4 குறிப்பிட்ட வழித்தடங்கள் மூலம் வேளச்சேரி விஜயநகரம் சந்திப்பை அடைந்து அங்கிருந்து திருவான்மியூர் வழியாக கொண்டு செல்லப்பட்டு, நீலாங்கரை பல்கலை நகர் கடலில் கரைக்க அனுமதி வழங்கப்பட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

ஆவடி காவல் ஆணையரக எல்லைக்குட்பட்ட விநாயகர் சிலைகள் அதேபோல ஆவடி காவல் ஆணையரகத்திற்குட்பட்ட திருநின்றவூர், பட்டாபிராம், ஆவடி, அம்பத்தூர், கொரட்டூரில் வைக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைகள், பாடி மேம்பாலம் வழியாக, நியூ ஆவடி சாலை, அண்ணா வளைவு, நெல்சன் மாணிக்கம் ரோடு வழியாக, வள்ளுவர் கோட்டம் சந்திப்பு வரையிலும், பூந்தமல்லி, காட்டுப்பாக்கம், போரூர் மற்றும் சுற்றுப்புறங்களில் வைக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைகள் விருகம்பாக்கம், வடபழனி வழியாக வள்ளுவர் கோட்டம் வரையிலும், திருவேற்காடு, வானகரம், மதுரவாயல் பகுதிகளில் வைக்கப்பட்டுள்ள சிலைகள் பூந்தமல்லி நெடுஞ்சாலை வழியாக கோயம்பேடு அடைந்து, அங்கிருந்து வள்ளுவர் கோட்டம் வரையிலும் சென்று. பின்னர் வள்ளுவர் கோட்டத்திலிருந்து ராதாகிருஷ்ணன் சாலை, காந்தி சிலை வழியாக சீனிவாசபுரம், பட்டிணப்பாக்கம் கடற்கரைக்கு செல்லும். இதே போல வட சென்னை பகுதியை அடுத்த மணலி, மாத்தூர், காரனோடை, பாடியநல்லூர், செங்குன்றம், புழல் மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்களில் வைத்துள்ள விநாயகர் சிலைகள் மூலக்கடை சந்திப்பு, வியாசர்பாடி, பேசின் பாலம், மின்ட் சந்திப்பு, ராஜாஜி சாலை, முத்துசாமி பாலம் வழியாக பட்டிணப்பாக்கம் சீனிவாசபுரம் கடலில் கரைக்க அனுமதி வழங்கப்பட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு 5 வழித்தடங்கள் மூலம் பட்டிணப்பாக்கம் சீனிவாசபுரம் கடலில் கரைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது

பொது இடங்களில் அனுமதியுடன் வைக்கப்பட்ட விநாயகர் சிலைகளை, காவல்துறையின் கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, உரிய வழிகாட்டுதல் நெறிமுறைகளை கடைபிடித்து அமைதியான முறையில் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் ஊர்வலமாக எடுத்துச் சென்று கடலில் கரைத்து காவல்துறைக்கு முழு ஒத்துழைப்பு தருமாறு சென்னை பெருநகர காவல், ஆவடி மற்றும் தாம்பரம் காவல் ஆணையரகங்கள் சார்பாக கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும், காவல்துறையின் கட்டுப்பாடுகளை மீறுவோர் மற்றும் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிப்பர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என சென்னை பெருநகர காவல்துறை சார்பாக எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.







"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

## சாலைகளில் ஏற்படும் பாதிப்புகளை நெடுஞ்சாலைத்துறைக்கு தெரிவிக்க விரைவில் செயலி அறிமுகம் - அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு



சென்னை, செப்டம்பர் 23, 2023: சாலைகளில் ஏற்படும் பாதிப்புகளை நெடுஞ்சாலைத் துறைக்கு தெரிவிக்க செயலி ஒன்று விரைவில் அறிமுகம் செய்யப்படும் என்று அமைச்சர் எ.வ.வேலு அறிவித்துள்ளார்.

சென்னை கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், நெடுஞ்சாலைத் துறையின் மூலம் சாலைகள் பராமரிப்பு மற்றும் தரமான சாலைகள் அமைப்பது குறித்து, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று ஆய்வுக் கூட்டம் நடத்தினார். இந்த ஆய்வுக்கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

சாலைகள் பராமரிப்பிற்கு அதிகாரிகள் தனி கவனம் செலுத்த வேண்டும். தரமான பணிகளை மேற்கொள்ள வேண்டும். பராமரிப்பு பணிகளுக்கு அனைத்து பொறியாளர்களும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். முதலமைச்சரின் 'விபத்தில்லா தமிழகம்' என்ற இலக்கை அடைய, சாலைகள் அனைத்தும் பள்ளமில்லா சாலைகளாக பராமரிக்கப்பட வேண்டும்.

தேசிய நெடுஞ்சாலை ஆணைய சாலைகளாக இருந்தாலும், அவற்றில் குழிகள் இருந்தால் அதை சீர் செய்ய திட்ட இயக்குனர் மற்றும் மண்டல அலுவலர் ஆகியோரிடம் அறிவுறுத்த வேண்டும். தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம், சென்னை - கன்னியாகுமரி சாலை மேம்பாட்டு திட்டம் போன்ற திட்டங்களில், தார்சாலை போடும்வரை போக்கு வரத்துக்கு ஏற்றவாறு சாலைகளை பராமரிக்க வேண்டும்.

மேம்பாட்டு பணிகளுக்காக ஒப்பந்ததாரர்களிடம் சாலைகளை ஒப்படைத்த பின், அச்சாலைகளில் ஏற்படும் பள்ளங்களை அவ்வப்போது சீர்செய்து, பணியை முடிக்கும் வரை பள்ளமில்லா சாலைகளாக பராமரிக்க வேண்டிய பொறுப்பு அந்த ஒப்பந்ததாரரிடமே உள்ளது. அதை உறுதி செய்ய வேண்டியது, பொறியாளரின் கடமை. ஆனால், அந்த ஒப்பந்ததாரர், தார் பணி செய்யும் வரை பள்ளங்களுடனே சாலைகள் வைத்துக் கொண்டிருப்பதால் அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்துகிறது.

மழைக் காலத்திற்குள்ஞ்.

அனைத்து சாலை பணிகளையும் வரும் அக்டோபரில் மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாகவே முடிக்க வேண்டும். பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள், வடிகால்களில் உள்ள செடிகள், முட்புதர்கள் போன்ற தடைகள் நீக்கப்பட வேண்டும். மழை பெய்தவுடன் கள ஆய்வு செய்து, எங்கு மழைநீர் தேங்குகிறது? எங்கு சாலையை மழை நீர் கடக்கிறது? போன்றவற்றை ஆய்வு செய்து, அவற்றை தவிர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அவசர கால பணிகளுக்கு மாவட்ட நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். மழைக்காலத்தில் வாகன சுரங்கப்பாதைகள் மற்றும் பாதசாரிகளின் சுரங்கப்பாதைகளில் நீர் தேங்குவதைத் தவிர்க்க தேவையான நீரேற்று பம்புகள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

அண்ணா சாலை, பூந்தமல்லி சாலை, ஜவகர்லால் நேரு சாலை, கத்திப்பாரா முதல் கோயம்பேடு வரை, ஜெனரல் பீட்டர்சன் சாலை, காந்தி இர்வின் பாலம், திருவள்ளுவர் சாலை, ராமபுரம் சாலை, கொளத்தூர் சாலை, சென்னை 'தினத்தந்தி' அலுவலகம் முன்பு, ஆகிய இடங்களில் நடைபெறும் பணிகளை போர்க்கால அடிப்படையில் அடுத்த 15 நாட்களுக்குள் முடிக்க வேண்டும்.

இந்த ஆண்டு நிரந்தர வெள்ள சீரமைப்பு பணிகளுக்காக 46 பணிகளுக்கு ரூ.105 கோடி மதிப்பில் நிர்வாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அனைத்துப் பணிகளும் அக்டோபர் மாதத்திற்குள் முடிக்கப்பட வேண்டும்.

சாலைகளில் ஏற்படும் பாதிப்புகளை நெடுஞ்சாலைத்துறைக்கு தெரிவிக்க ஒரு செயலி விரைவில் அறிமுகம் செய்யப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## பட்டாசுகளால் சுற்றுச்சூழலுக்கு மாசு தீபாவளிக்கு 2 மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிக்கலாம் - சுப்ரீம் கோர்ட்




சென்னை, செப்டம்பர் 23, 2023: பேரியம் மற்றும் சரவெடி கொண்டு பட்டாசு தயாரிக்க அனுமதி கோரிய மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. தீபாவளிக்கு 2 மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிக்கலாம் என்ற உத்தரவு தொடரும் என்று சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ளது.

தீபாவளி பண்டிகை நேரத்தில் வெடிக்கப்படும் பட்டாசுகளால் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுகிறது என்றும், எனவே பட்டாசு தயாரிக்க, விற்பனை செய்ய, பாதுகாத்து வைக்க தடை விதிக்க வேண்டும் என்றும் சுப்ரீம் கோர்ட்டில் அர்ஜுன் கோபால், கோபால் சங்கர நாராயணன் ஆகியோர் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

இதனை விசாரித்த சுப்ரீம் கோர்ட், அதுதொடர்பாக மத்திய அரசு, மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவற்றின் விளக்கங்களை கேட்ட பின்னர் கடந்த 2018-ம் ஆண்டு பட்டாசு வெடிப்பதற்கு அதிரடியாக கட்டுப்பாடுகளை விதித்து உத்தரவிட்டது.

இதன்படி பேரியம் என்கிற அலுமினிய பொருட்களுடன் கூடிய சரவெடி பட்டாசுகளுக்கு தடை விதிக்கப்பட்டதுடன், குறைந்த அளவிலான சத்தம் மற்றும் புகையை வெளியிடக்கூடிய பட்டாசுகளை மட்டுமே வெடிக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் உத்தரவு பிறப்பித்தது. அதிக அளவில் அலுமினியம் சேர்க்கப்பட்ட பட்டாசுகளை விற்பனை செய்யக்கூடாது. ஆன்லைனில் பட்டாசுகளை விற்பனை செய்யக்கூடாது போன்ற கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன.

இந்நிலையில் தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் வேளையில் பட்டாசு தயாரிப்பு நிறுவனங்கள் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பேரியம் இல்லாத பட்டாசுகளை தயாரிப்பது சிரமம் என்றும், அது சரவெடியில் குறைவான அளவே உள்ளது என்றும், எனவே அதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் என்றும் பட்டாசு தயாரிப்பாளர்கள் சார்பில் கோரிக்கை விடப்பட்டது.

இந்த வழக்கில் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் ஏ.எஸ்.போபண்ணா, எம்.எம்.சுந்தரேஷ் ஆகியோர் அமர்வு நேற்று தீர்ப்பை வழங்கியது. அப்போது சரவெடி பட்டாசுகளுக்கு விதிக்கப்பட்ட தடை நீடிப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

நீதிபதிகள் மேலும் கூறியதாவது:

சரவெடி பட்டாசுகளில் பேரியம் வேதிப்பொருள் சேர்ப்பது அத்தியாவசியமாகிறது. அது சுற்றுச்சுழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என்கிற பட்டாசு நிறுவனங்களின் கோரிக்கை ஏற்கப்படவில்லை. அவர்களது மனுவை தள்ளுபடி செய்கிறோம்.

2 மணி நேரம் வெடிக்கலாம்

பேரியம், சரவெடி பட்டாசுகள் ஆகிய இரண்டில் மட்டுமே தற்போது தீர்ப்பு வழங்கியுள்ளோம். மூல வழக்கின் விசாரணை தொடர்ச்சியாக நடைபெறும். வரும் தீபாவளிக்கு சுற்றுச்சூழலை பாதிக்காத பசுமைப் பட்டாசுகளை மட்டுமே வெடிப்பதற்கு அனுமதிக்க முடியும்.

காலை 6 மணியில் இருந்து 7 மணி வரையிலும், இரவில் 7 மணியில் இருந்து 8 மணி வரையிலும் என 2 மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிக்க அனுமதி அளிக்கப்படுகிறது. இவ்வாறு நீதிபதிகள் தெரிவித்தனர்.

## தொழில் துறையை மேம்படுத்த 24வது ரப்பர் மாநாடு சென்னை வர்த்தக மையத்தில் சென்டரில் இந்திய ரப்பர் உற்பத்தியாளர்கள் ஆராய்ச்சி சங்கம் ஏற்பாடு




சென்னை, செப்டம்பர் 23, 2023: இந்திய ரப்பர் உற்பத்தியாளர்கள் ஆராய்ச்சி சங்கம் ஏற்பாடு செய்த 24வது ரப்பர் மாநாட்டை, சென்னை வர்த்தக மையத்தில் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டு துறை இணைச் செயலர் சஞ்சீவ் தொடங்கி வைத்தார்.

ஷீலா தாமஸ், ஜே.கே டயர் இண்டஸ்ட்ரீஸ் எம்.டி., அன்ஷுமன் சிங்கானியா, ஐ.ஆர்.எம்.ஆர்.ஏ., தலைவர் டாக்டர். கே. ராஜ்குமார், ஐ.ஆர்.எம்.ஆர்.ஏ., தலைவர் டாக்டர். ஆர்.முகோபாத்யாய் ஆகியோரும் துவக்கத்தில் கலந்து கொண்டனர்.

எக்ஸ்போ மற்றும் ரப்பர் தொழில் பற்றிய விவரங்களைப் பகிர்ந்து கொண்ட ஐ.ஆர்.எம்.ஆர்.ஏ., தலைவர் டாக்டர். கே. ராஜ்குமார், ஐ.ஆர்.எம்.ஆர்.ஏ., தலைவர் டாக்டர். ஆர்.முகோபாத்யாய், "இந்த மாநாடு மற்றும் எக்ஸ்போவின் நோக்கம் நிலைத்தன்மை மற்றும் சுற்றறிக்கை பொருளாதாரத்தில் உன்னதமான கண்டுபிடிப்புகளைக் கொண்டுவருவதாகும். பல்வேறு துறைகளில் இருந்து டிரெண்டிங் தொழில்நுட்பத்தை சீரமைத்தல், ரப்பர் தொழில் துறையை வலுபடுத்த பல்வேறு நிபுணர்களின் கருத்துகளுக்கு ஒரு தனித்துவமான தளத்தை இந்த நிகழ்வு வழங்குகிறது. உலகளாவிய ரப்பர் பொருளாதாரம் சி ஒய் 2028 க்குள் யூ எஸ் டி 50 பில்லியனை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, முக்கியமாக ஆட்டோமொபைல்களின் உற்பத்தி, டயர்கள் மற்றும் ஷாக் அப்சார்பர்கள், ப்ரொடெக்டிவ் பேட்கள் போன்ற பிற வாகன உதிரிபாகங்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது. மேலும், ரப்பரின் விரிவடையும் பயன்பாடு சமையல் ஸ்பேட்டூலாக்கள், ஷவர் பாய்கள், பாத்திரங்களைக் கழுவுதல், கையுறைகள் போன்ற பொருட்களின் உற்பத்தியில்.அதிகரித்து வருகிறது.

இந்திய ரப்பர் பொருளாதாரம் மொத்த ரப்பர் நுகர்வில் 2வது பெரியது மற்றும் ஒட்டுமொத்த மொத்த ரப்பர் உற்பத்தியில் 5வது பெரியது. 2021-22 நிதியாண்டில் 3560 மெட்ரிக் டன்னாக இருந்த ஏற்றுமதி 2022-23 நிதியாண்டில் 3700 மெட்ரிக் டன் இயற்கை ரப்பர் ஏற்றுமதி செய்துள்ளது. எஃப் ஒய் 22-23 டபிள்யூ.ஆர். டு எஃப் ஒய் 21-22 இல் இந்தியாவின் ஏற்றுமதி அதிகரிப்பு கிட்டத்தட்ட 4% ஆகும்.

எஃப் ஒய் 22-23 இல் ரப்பர் மற்றும் அதன் பொருள்களின் ஏற்றுமதி ரூ.37597 கோடி.கடந்த ஆண்டு 21-22 நிதியாண்டில் ரூ.34559 கோடி.

இயற்கை ரப்பர் நமது நாட்டின் முக்கிய உற்பத்தி சொத்துக்களில் ஒன்றாகும். உற்பத்தியாளர்களின் நலனை பல்வேறு சலுகைகள் மூலம் காப்பாற்ற வேண்டும். உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க வேண்டிய அவசியம் உள்ளது; எம் எஸ் எம் ஈ துறைகள் வசதிகளைப் பெறுவதற்கு தொழில்நுட்ப செயல்விளக்க மையம் மற்றும் திறன் மையங்கள் நாடு முழுவதும் அதிக எண்ணிக்கையில் அமைக்கப்பட வேண்டும்.

அரசு 'ஆத்மநிர்பார் பாரத்' மற்றும் 'மேக் இன் இந்தியா' மற்றும் 'உலகளாவிய போட்டித்திறனுக்கான' திட்ட வரைபடத்துடன் இணைந்த உள்நாட்டு ரப்பர் தயாரிப்புகளை உருவாக்க நட்புரீதியான கொள்கைகளை உருவாக்குவதன் மூலம் எம்எஸ்எம்இ யை ஊக்குவிக்க வேண்டும்.

தொழில்துறை தற்போது எதிர்கொள்ளும் சவால்கள் ரப்பர் இரசாயனங்கள் மற்றும் அவற்றின் உற்பத்திக்குத் தேவையான முக்கிய மூலப்பொருட்களின் பற்றாக்குறை ஆகும்.

ஆண்டு வளர்ச்சி விகிதம் 8 - 9%, உயரும் அந்நியச் செலாவணி கையிருப்பு, மூலதனச் சந்தைகளில் விரைவான விரிவாக்கம் மற்றும் எஃப் டி ஐ வரத்து ஆகியவற்றுடன், உலகின் இரண்டாவது வேகமாக வளரும் பெரிய பொருளாதாரம் என்ற பட்டத்தை இந்தியா பெருமையுடன் கூறுகிறது. இது வாகன உற்பத்தியில் அதிக செறிவைக் கொண்டுள்ளது மற்றும் தென்னிந்தியாவில் பெரிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் இருப்பைக் கொண்டுள்ளது. இன்று சுமார் 212 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ள ரப்பர் தயாரிப்புகளுக்கான உலகளாவிய சந்தையும் 2025 ஆம் ஆண்டளவில் இருமடங்காக வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்திய காலணித் தொழில்கள் 10-11% சிஏஜிஆரில் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

# ரேலா மருத்துவமனையில் 42 வயதான குஜராத்தி பெண்மணிக்கு வெற்றிகரமான இரட்டை நுரையீரல் உறுப்புமாற்று சிகிச்சை




சென்னை, செப்டம்பர் 23, 2023: உறுப்புமாற்று சிகிச்சையில் உலகளவில் புகழ்பெற்ற ரேலா மருத்துவமனை, நுரையீரல் உறுப்பிடை நார்த்திசு (ILD) என்ற நோயால் பாதிக்கப்பட்டிருந்த திருமதி. திம்பால் ஷா என்ற குஜராத்தைச் சேர்ந்த 42 வயது பெண்மணிக்கு அதிக சிக்கலான இரட்டை நுரையீரல் உறுப்புமாற்று சிகிச்சையை வெற்றிகரமாக செய்திருக்கிறது மிலிஐி என்பது, நுரையீரலில் உள்ள மிகச்சிறிய காற்றுப்பைகளை பாதித்து, சுவாசிப்பதை அடிக்கடி கடும் சிரமமானதாக மாற்றக்கூடியதாகும். திடீரென ஏற்பட்ட இவரது நோய்க்கும், புறாக்களுக்கும் தொடர்பு இருப்பதாக அறியப்படுகிறது. நார்த்திசு நுரையீரல் நோய் இவருக்கு இருப்பது உறுதி செய்யப்பட்டது. புறாக்களின் கழிவுகள், எச்சங்களினால் ஏற்படுகின்ற புறா வளர்ப்பவர்களின் நுரையீரல் நோய் அல்லது மிகை உணர்திறன் மூச்சுப்பை அழற்சி எனவும் இந்நோய் சில நேரங்களில் அழைக்கப்படுகிறது. திருமதி. ஷா கடந்து வந்த இப்பாதையில் எண்ணற்ற தடைகளும், சவால்களும் இருந்தபோதிலும் விடாப்பிடியான மன உறுதியும் கலந்திருந்தன. கடும் சவாலான நோய் பாதிப்பிலிருந்து இப்பெண்மணி விடுபட்டிருக்கும் இந்நிகழ்வானது, மேம்பட்ட மருத்துவ அறிவு மற்றும் உறுப்புதானத்தின் அற்புதமான தாக்கத்திற்கு சிறப்பான எடுத்துக்காட்டாக திகழ்கிறது. இதேபோன்ற கடுமையான உடல்நல சவால்களால் அவதியுறும் நபர்களுக்கு இப்பெண்ணின் வாழ்க்கை கதை, நம்பிக்கையை வழங்கும் ஒளிதீபமாக ஒளிர்கிறது. சுவாசிப்பதில் தொடர்ந்து இருந்து வந்த பிரச்சனை, பல்வேறு மருத்துவர்களோடு ஆலோசனை மற்றும் சந்திப்புகள், பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள் என, நுரையீரல் இடைத்திசு நோயால் அவதிப்பட்ட திரு. திம்பால் ஷா - ன் வாழ்க்கை மிக சிரமமானதாகவே தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. வலுவான மன உறுதி அப்பெண்ணுக்கு இருந்த போதிலும் கூட, மருத்துவ சிகிச்சையானது, குறுகிய கால நிவாரணத்தையே அவருக்கு வழங்க முடிந்தது. இதனால், நுரையீரல் செயலிழப்பு என்ற அச்சுறுத்தும் ஆபத்து தென்படத் தொடங்கியது. இளமையின் தீவிரத்தை உணர்ந்த திருமதி. ஷா மற்றும் அவரது குடும்பத்தினர், சென்னையிலுள்ள ரேலா மருத்துவமனையில் சிகிச்சையை நாடி வந்தனர். இவரது சிகிச்சைக்கான செலவுகளுக்கு கிரவுட்ஃபண்டிங் பரப்புரை வழியாகவும், அரசு மற்றும் ரேலா மருத்துவமனை வழங்கிய ஆதரவின் வழியாகவும் நிதி திரட்டப்பட்டது. விரிவான மதிப்பாய்விற்குப் பிறகு இப்பெண்ணுக்கு இருபக்க நுரையீரல் உறுப்புமாற்று சிகிச்சையை செய்ய ரேலா மருத்துவர்கள் குழு முடிவு செய்தது. இவருக்கு பொருத்தமான ஜோடி நுரையீரல்களுக்காக மாநிலத்தின் உறுப்புமாற்று பதிவகத்தில் இவர் பதிவு செய்யப்பட்டார். மூளைச் சாவடைந்ததாக அறிவிக்கப்பட்ட 19 வயதான ஒரு இளம் பெண்ணின் ஆரோக்கியமான ஒரு ஜோடி நுரையீரல்களை தானமாக வழங்க அவரது குடும்பத்தினர் தியாக மனதுடன் முன்வந்தனர். இந்த உறுப்புதானமே திருமதி. ஷாவுக்கு வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தை தொடங்க உதவியிருக்கிறது. ஒரு வருட காலமாக உறுப்பு தானத்திற்காக காத்திருந்த சோதனையான காலத்தில் பல கடுமையான நோய் விளைவுகளை திருமதி. ஷா எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நீண்டகாலம் எதிர்பார்க்கப்பட்ட அழைப்பு, இறுதியில் உறுப்புதானம் பற்றிய செய்தியினை இவருக்கு வழங்கியது. இந்த அறுவைசிகிச்சை, சிக்கலான செயல்முறைகள் நிறைந்தது; இதற்கு துல்லியமும், மேம்பட்ட திறனும் அவசியம். இப்பெண்ணுக்கு செய்யப்பட்ட வெற்றிகரமான உறுப்புமாற்று சிகிச்சையானது, உறுப்புதானம் அளித்தவர், மற்றும் பெற்றவரது குடும்பங்களது கூட்டுமுயற்சிகள், உறுப்புமாற்று சிகிச்சை குறித்த ஆராய்ச்சியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் சிகிச்சையை சிறப்பாக ஏதுவாக்குகின்ற லாஜிஸ்டிக்ஸ் உதவி ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது. நுரையீரல் உறுப்புமாற்று சிகிச்சையில் உலகளவில் மூன்றாவது இடத்தில் இந்தியா இருப்பது, உறுப்புமாற்று சிகிச்சையை ஊக்குவிப்பதில் இந்நாடு கொண்டிருக்கும் அர்ப்பணிப்பை நேர்த்தியாக வெளிப்படுத்துகிறது. ரேலா மருத்துவமனையின் சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குனர் பேராசிரியர் முகமது ரேலா இது தொடர்பாக கூறியதாவது: “ரேலா மருத்துவமனையில் திரு. திம்பால் ஷா - க்கு செய்யப்பட்டிருக்கும் வெற்றிகரமான இரட்டை நுரையீரல் உறுப்புமாற்று சிகிச்சை, நோயாளிகள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் ஆகிய இருதரப்பினரின் தளராத மனஉறுதிக்கும், மற்றும் மருத்துவர்களின் நிபுணத்துவத்திற்கும் சாட்சியமாக இருக்கிறது. கடுமையான சோதனையும், சோகமும் எதிர்கொள்கின்ற போதிலும் உறுப்புதானம் என்ற தன்னலமற்ற தியாகம், இருள் சூழ்ந்த சூழ்நிலைகளிலும் கூட நம்பிக்கை தீபத்தை ஏற்றி வாழ்க்கைக்கு புத்துயிரை வழங்கியிருக்கிறது என்பது நாம் அனைவரும் நினைவில் நிறுத்தவேண்டிய அம்சமாகும்.”

“தூய்மையான சுற்றுச்சூழலை நாம் பராமரிப்பது முக்கியம். பல ஆண்டுகளாக பறவைகளின் கழிவுகள், எச்சங்கள், தூசி மற்றும் சிறகுகளுக்கு வெளிப்படும் நபர்களுக்கு சரிசெய்ய இயலாத நுரையீரல் சேதம், மிகை உணர்திறன் மூச்சுப்பை அழற்சி மற்றும் நாட்பட்ட சுவாசப்பாதை செயலிழப்பு ஆகியவை ஏற்படக்கூடும்.” என்று அவர் மேலும் கூறினார்.

ரேலா மருத்துவமனையின் இதயம் மற்றும் நுரையீரல் உறுப்புமாற்று சிகிச்சை துறையின் கிளினிக்கல் லீட் மற்றும் முதுநிலை நிபுணர் டாக்டர். ஆர். மோகன் பேசுகையில், “வழக்கமான மருந்துகளும், சிகிச்சை முறைகளும் இனிமேலும் பயனளிக்காத கடும் பாதிப்பு நிலையை திருமதி. ஷா - ன் உடல்நிலை எட்டியிருந்தது. உடலிலிருந்து கரியமில வாயுவை அகற்றுவதில் அப்பெண்ணின் நுரையீரல்கள் கடும் சிரமப்பட்டதன் காரணமாக, உறுப்புமாற்று சிகிச்சையை இவருக்கு உடனடியாக செய்வது அவசியமாக இருந்தது.” என்று விளக்கமளித்தார்.

இந்த அறுவைசிகிச்சையை செய்து முடிப்பதற்கு 8 மணி நேரங்கள் ஆகின. அறுவைசிகிச்சை நிபுணர்கள், மயக்கவியல் வல்லுனர்கள், இரத்தம் / மருந்து உட்செலுத்தல் நிபுணர்கள் மற்றும் அறுவைசிகிச்சை உதவியாளர்கள் உட்பட, 14 மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழு இந்த அறுவைசிகிச்சையை மேற்கொண்டது. “இந்த அறுவைசிகிச்சையின்போது திருமதி. ஷா - ன் இரு நுரையீரல்களும் அகற்றப்பட்டு, அதற்குப் பதிலாக தானமளித்த நபரின் ஆரோக்கியமான நுரையீரல்கள் பொருத்தப்பட்டன. இரத்த இழப்பை குறைப்பதற்கு ஒரு தனித்துவமான அணுகுமுறையையும், உத்தியையும் நாங்கள் பயன்படுத்தினோம். அப்பெண்ணின் இதயம் மற்றும் நுரையீரல்களின் இயக்கத்திற்கு சிகிச்சையின்போது வெளியார்ந்த உதவியை நாங்கள் வழங்கினோம்.” என்று இதய உறுப்புமாற்று அறுவைசிகிச்சை நிபுணரான டாக்டர். பிரேம் ஆனந்த் ஜான் குறிப்பிட்டார். உணர்விழப்பு மருந்து தீவிர சிகிச்சை பராமரிப்பை நிர்வகித்த டாக்டர். சரண்யா குமார் பேசுகையில், “திருமதி. ஷா - ன் தீவிர பாதிப்பு நிலையின் இயல்பு காரணமாக அவருக்குப் பொருத்தமான நுரையீரல்களை வழங்கும் தானமளிப்பவரை கண்டறிவது ஒரு சவாலாகவே இருக்கிறது. பொருத்தமான தானமளிப்பவருக்காக எட்டுமாத காலம் இப்பெண்மணி காத்திருக்க வேண்டியிருந்தது.” என்று குறிப்பிட்டார்.

தனது மனமார்ந்த நன்றியை வெளிப்படுத்திய திருமதி. திம்பால் ஷா, “வாழ்க்கையை எனக்கு திரும்பவும் தந்திருப்பதற்காக நான் என்றும் நன்றியுள்ளவராக இருப்பேன். எனக்கு செய்யப்பட்ட இந்த அறுவைசிகிச்சை, வெற்றிகரமாக அமைந்ததால் ஒவ்வொரு நாளும் படிப்படியாக நான் வலுப்பெற்று வருகிறேன். முழுமையாக குணமடைந்ததற்குப் பிறகு ஏறக்குறைய ஒரு இயல்பு வாழ்க்கையை வாழத்தொடங்கும் நாளுக்காக நான் ஆவலோடு காத்திருக்கிறேன்.” என்று கூறினார்.

பாதிப்பிற்கு ஆளாகியிருந்த நோயெதிர்ப்பு திறனின் காரணமாக தொற்றுக்கான இடர்வாய்ப்பை குறைப்பதற்கும் மற்றும் தொடர்ந்து நடைபெற்று வரும் அவரது சிகிச்சையின் ஒரு பகுதியாக புதிய நுரையீரல்கள் நிராகரிக்கப்படுவதை தடுக்கவும் திருமதி. ஷா தொடர்ந்து மருந்துகளை எடுத்துக்கொள்வது அவசியம்.

# இந்தியா முழுவதிலும் உள்ள கண் மருத்துவ மாணவர்களுக்காக இரு - நாட்கள் கல்வி பயிலரங்கை நடத்தும் டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனை




சென்னை, செப்டம்பர் 23, 2023: கண் மருத்துவவியல் மாணவர்களுக்காக தேசிய, முதுகலை தொடர் மருத்துவ கல்வி திட்டமான கல்பவிருக்ஷா 23 - 16 வது வருடாந்திர தொடர் மருத்துவக்கல்வி செயல்திட்டத்தை டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனை, சென்னையிலுள்ள அதன் ஆராய்ச்சி மற்றும் கல்வி பிரிவான கண் ஆராய்ச்சி மையத்தின் ஒத்துழைப்போடு ஏற்பாடு செய்து நடத்துகிறது. ஏஐஓஎஸ் - ன் அறிவியல் குழுவின் தலைவர் டாக்டர். நம்ருதா ஷர்மா இந்த நிகழ்வை தொடங்கி வைத்தார். இதன் தொடக்க விழாவில் டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனைகள் குழுமத்தின் தலைவர் பேராசிரியர் அமர் அகர்வால் தலைமையேற்க, டாக்டர். சந்தோஷ் ஜி. ஹொனாவர், சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். கல்பவிருக்ஷா என்ற பெயரில் 2007-ம் ஆண்டு தொடங்கப்பட்ட தேசிய அளவிலான முதுகலை பட்டதாரி மாணவர்களுக்கான சிஎம் ஈ செயல்திட்டத்தில், இதற்கான தேர்வுகளை எழுதவிருக்கின்ற 35-க்கும் அதிகமான மருத்துவ கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்கின்றனர்.

கண் மருத்துவவியலின் வெவ்வேறு துறைகளில் நிபுணர்களான ஆசிரியர்களுடன் கலந்துரையாடவும், அவர்களது விளக்க உரைகளை கேட்கவும் இந்நிகழ்ச்சி இம்மாணவர்களுக்கு ஒரு தளத்தை அமைத்துத் தருகிறது. இரண்டாவது நாளன்று நடைபெறும் நேர்வு விளக்கக்காட்சி இக்கல்வி திட்டத்தின் ஒரு தனித்துவ அம்சமாகும். மருத்துவ நேர்வுகளை விளக்கிக் கூறுவது மற்றும் விவாதிப்பது குறித்து கல்வியாளர்களிடமிருந்து நேரடி ஆலோசனை குறிப்புகளையும் இந்நிகழ்வின் பங்கேற்பாளர்கள் பெறுகின்றனர்.

ஏஐஓ எஸ் - ன் அறிவியல் குழு தலைவர், டாக்டர். நம்ரதா ஷர்மா இந்நிகழ்வை தொடங்கி வைத்து பேசியதாவது: “கல்பவிருக்□ஷா கல்வித்திட்ட நிகழ்வை தொடங்கிவைப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. உருவாகிவரும் கண் மருத்துவர்கள் அவர்களது அறிவை மேம்படுத்திக்கொள்ளவும், சமீபத்திய மருத்துவ செயல்முறைகளை அறிந்துகொள்ளவும் சிறந்த வாய்ப்பை வழங்கும் இந்நிகழ்விற்காக டாக்டர். அகர்வால்ஸ் குழுமத்தை நான் மனமார பாராட்டுகிறேன்.”

டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனைகள் குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் டாக்டர். அமர் அகர்வால் கூறியதாவது: “16வது ஆண்டு நிகழ்வாக நடத்தப்படும் கல்பவிருக்ஷா, மருத்துவ நேர்வுகள் விளக்கக் காட்சியுடன், அனுபவம் மிக்க கல்வியாளர்களோடு விரிவான விவாதத்தில் ஈடுபடவும், நேரடியாக ஆலோசனை குறிப்புகளைப் பெறவும் பங்கேற்பாளர்களுக்கு வாய்ப்பளிக்கிறது. சிறப்பான திறன்களை பெற்றுக்கொள்ளவும், நோயாளிகள் உட்பட பொது சமூகத்திற்கு சேவையாற்றவும் கண் மருத்துவர்களுக்கு இத்திட்டம் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும்.”

கல்பவிருக்ஷா '23 நிகழ்வில் டாக்டர். ஜே. அகர்வால் எக்ஸெம்லரி விருது, டாக்டர். வி. வேலாயுதம் நிலையான செயல்திறன் விருது மற்றும் இந்நிகழ்வின்போது அதிக ஆர்வமூட்டும் நேர்வு விளக்கக்காட்சியை வழங்குபவருக்கு டாக்டர். (திருமதி). டி. அகர்வால் விருது ஆகியவையும் தரப்படுகின்றன.

செய்முறை அமர்வில் மாறுகண் போன்ற மிகச் சிரமமான நேர்வுகளை பரிசோதிப்பது அல்லது ரெட்டினோஸ்கோப்பி / கோனியோஸ்கோப்பி போன்ற நோயறிதல் செயல்முறை மீது ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் விளக்கமளிக்கப்படும். இந்நாட்டில் வெகுசில கண் மருத்துவமனைகளில் மட்டுமே கிடைக்கின்ற உயர் தொழில்நுட்ப திறன் கொண்ட மருத்துவ சாதனங்களைப் பயன்படுத்துவது மீதான பரிச்சயமும் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் கிடைக்கும். தேர்வு தொடர்பான அனைத்து முக்கிய அம்சங்களும் மற்றும் செய்முறை தேர்வுக்கான நேர்வு விளக்க காட்சிகளும் இந்த இரு-நாள் கல்வித்திட்டத்தில் இடம்பெறுகின்றன. பங்கேற்பாளர்கள் மத்தியில், ஒரு க்விஸ் நிகழ்வும், அதிவேகமாக பதிலளிக்கும் மீளாய்வு அமர்வும் நடத்தப்பட்டன.



ஹலோ மிரர் மெட்ராஸ்
தினசரி காலை நாளிதழ்
hellomadrasdaily@gmail.com
உள்ளது உள்ளபடி



# இரவில் ஆந்தைபோல் விழித்திருப்பதில் மகிழ்ச்சியடைபவரா நீங்கள்? உங்கள் இருதய ஆரோக்கியம் ஆபத்தில் உள்ளது டாக்டர். தேஜஸ்வி என் மார்லா, இருதயநோய் நிபுணர் ஃபோர்டிஸ் மலர், அடையாறு



சென்னை, செப்டம்பர் 23, 2023: இன்றைய இளைஞர்கள் மற்றும் உழைக்கும் வர்க்கத்தினர் அதிக அளவில் காபி குடிப்பது, நண்பர்களுடன் அடிக்கடி புகைபிடிப்பது, பொது இடங்களில் கொட்டாவி விடுவது, வரவேற்பு சோபாவில் குட்டித் தூக்கம் தூங்குவது போன்ற போக்கை உருவாக்கியுள்ளனர். நள்ளிரவு பார்ட்டி, இரவு வேலை செய்தல், தங்களுக்குப் பிடித்தமான வெப் சீரிஸை அதிக நேரம் பார்ப்பது அல்லது தங்களுக்குப் பிடித்த விளையாட்டைப் பார்க்க இரவு முழுவதும் விழித்திருப்பது வழக்கமான செயல்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் இந்த செயலால் மாரடைப்பு அல்லது பக்கவாதம் ஏற்படலாம், இது அவர்களின் வாழ்நாள் முழுவதும் துன்பத்தை ஏற்படுத்தும் என்பது அவர்களுக்குத் தெரியுமா?

மோசமான தூக்கப் பழக்கம் அல்லது போதிய தூக்கமின்மை பெரிய உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்று ஒவ்வொரு துறையைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் பொதுமக்களை எச்சரிக்கின்றனர். ஆனால் எச்சரிக்கை பயனுள்ளதாக இருக்கிறதா என்பது கேள்வியே? மருத்துவ நிபுணர்களின் கூற்றுப்படி, தூக்கமின்மை நோயாளிகள் அதிகமாகி வருகின்றனர். இதய நோய் நிபுணர்கள் இது ஒரு ஆபத்தான எச்சரிக்கையாக கருதுகிறார்கள், ஏனெனில் இது எல்லா வயதினருக்கும் பாலினத்தவர்களுக்கும் இருதய பிரச்சினைகள் ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கிறது. 30 முதல் 50 வயது வரை உள்ள இளைஞர்கள் போதிய இரவு தூக்கத்தை மதிக்காததால் அதிகமாகவும் மற்றும் எளிதில் பாதிக்கப்படுகின்றனர்..

இந்தக் கட்டுரையில், டாக்டர் தேஜஸ்வி என். மார்லா, சிடிவிஎஸ், ஃபோர்டிஸ் மலர், தூக்கமின்மை, இதய ஆரோக்கியம் மற்றும் மாரடைப்பு அல்லது பக்கவாதம் ஏற்படும் அபாயத்தை எவ்வாறு அதிகரிக்கும் என்பதை விவரிக்கிறார்.

ஒரு நல்ல இரவு தூக்கத்தைப் பெறுவதன் நன்மைகளை பல ஆய்வுகள் மூலம் போதுமான அளவு நிரூபிக்கப்பட்டுள்ளன. மேலும், ஆய்வுகள் போதிய தூக்கம் இருதய ஆரோக்கியத்துடன் தொடர்புள்ளதை அறிவுறுத்தியுள்ளது. தூக்கமின்மை மாரடைப்பு அல்லது பக்கவாதம் ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கிறது என்பது நன்கு நிறுவப்பட்டுள்ளது. உண்பது உடலில் உள்ள ஒவ்வொரு உயிரணுவையும் எவ்வாறு பாதிக்கிறது என்பதைப் போலவே, செல்கள் ஓய்வெடுக்கவும் மீண்டும் உற்சாகம் பெறுவதற்கு தூக்கம் உதவுகிறது. இருதய ஆரோக்கியத்தை பராமரிக்க பெரியவர்களுக்கு ஒரு இரவுக்கு எட்டு மணிநேரம் திடமான தூக்கம் தேவை. உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம், உயர் கொழுப்பு மற்றும் நீரிழிவு ஆகியவை நல்ல தூக்க சுகாதாரத்துடன் நிர்வகிக்கக்கூடிய உடல் நலப் பிரச்சினைகளில் அடங்கும்.

கார்டிசோல் மற்றும் லெப்டின் போன்ற ஹார்மோன்கள் போதுமான தூக்கத்தைப் பெறாதபோது பிரச்னையை தருகிறது. மாரடைப்புக்கு காரணமான தமனிகளில் கொழுப்பு, ஒழுங்கற்ற இதய துடிப்பு மற்றும் பிற இரசாயனங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியானது மன அழுத்த ஹார்மோன் கார்டிசோலின் உயர்ந்த அளவுகளால் ஏற்படுகிறது. லெப்டின் அளவு குறைவாக இருக்கும்போது நாம் அதிகமாக சாப்பிடுகிறோம், குறைவாக உடற்பயிற்சி செய்கிறோம். இந்த காரணிகள் ஒரு தீய பழக்க சுழற்சியை உருவாக்குகின்றன மற்றும் இதய நோய் அபாயத்தை அதிகரிக்கின்றன.

ஆரோக்கியமான உறுப்புகளுக்கு போதுமான தூக்கம் முக்கியம் என்றாலும், அதிகமாக தூங்குவதும் தீங்கு விளைவிக்கும். தூக்கமின்மை இதயத்திற்கு மோசமானது என்பதால், அதிக நேரம் தூங்குவது நன்மை பயக்கும் என்று மக்கள் நம்புவதால், இதைப் பற்றியும் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். ஆராய்ச்சியின் படி, ஒவ்வொரு இரவும் ஆறு முதல் எட்டு மணி நேரம் தரமான தூக்கம் பெறும் நபர்கள் ஒன்பது மணி நேரத்திற்கும் மேலாக தூங்குபவர்களை விட ஆரோக்கியமான இதயங்களைக் கொண்டுள்ளனர்.

வயது மற்றும் பாலினத்தைப் பொருட்படுத்தாமல் அனைத்து மக்களும் தூக்கமின்மையால் அவதிப்படுகிறார்கள், ஜப்பானுக்கு அடுத்தபடியாக தூக்கமின்மை உள்ள நாடுகளில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. ஒரு காலத்தில், பெண்களுக்கு மாரடைப்பு வராமல் தடுக்கும் சக்தி இருப்பதாக கருதப்பட்டது. இருப்பினும், தூக்கம் இல்லாத பெண்களுக்கு இது உண்மையல்ல நிரூபணமாகியுள்ளது. தூக்கமின்மையால் அவதிப்படும் பெண்களுக்கு ஆண்களை விட மாரடைப்பு வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குறைவாக தூங்கும் இளம்பெண்கள் இது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தூக்கமின்மை அல்லது தூக்கம் தொடர்பான கோளாறுகள் காரணமாக சராசரியாக ஆண்கள் கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகள் மற்றும் பெண்கள் ஏழு ஆண்டுகளுக்கு மேல் இருதய நோய்யற்ற வாழ்க்கையை இழக்கிறார்கள்.

பரிந்துரைக்கப்பட்ட உரங்கப் போகும் நேரம் இரவு 10 மணிக்கு முன் ஆகும். பெரும்பாலான இந்தியர்கள் நள்ளிரவுக்குப் பிறகுதான் உறங்கச் செல்கிறார்கள் என்று ஒரு ஆன்லைன் ஆதாரம் கூறுகிறது. பாலினத்தைப் பொருட்படுத்தாமல், இது இளைஞர்களிடையே மோசமாக உள்ளது. நீல ஒளி வெளிப்பாடு, டிஜிட்டல் சாதனங்களை அதிகமாகப் பார்ப்பது, இரவு நேர கேஜெட் பயன்பாடு, மன அழுத்தம் நிறைந்த வேலைச் சூழல்கள் மற்றும் நிதி நெருக்கடி ஆகியவை உலக அடிப்படையில் தூக்கத்தை அதிகமாக சீர்குலைக்கும் காரணியாக கருதப்படுகிறது. பெரும்பாலான மக்கள் ஏற்கனவே இவற்றைப் பற்றி நன்கு அறிந்தும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்களுக்குப் பிடித்த கேம் அல்லது தங்களுக்குப் பிடித்த ஆன்லைன் தொடரின் புதிய எபிசோடிர்க்கு பதிலாக ஒரு நல்ல இரவு தூக்கத்தைப் பெறுவதைத் தேர்வு செய்வதில்லை என்பது வருத்தத்திற்குரியது..

இது ஒரு இரவு மட்டுமே தானே என்றும், ஒரிரு பகல் குட்டித் தூக்கம் அல்லது காபி அருந்துவதன் மூலம் நம் இரவு தூக்கத்தை ஈடுகட்ட முடியும் என்றும் நாம் நம்பலாம். பொதுவான கருத்துக்கு மாறாக, நாம் நம் முடைய சர்க்காடியன் ரிதத்தை இங்கே சீர்குலைக்கிறோம். நீங்கள் தூங்கும்போது உங்கள் உடல் பல மாற்றங்களைச் சந்திக்கிறது, இது ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்குத் தேவையான ஓய்வைப் பெற உங்களை அனுமதிக்கிறது. அடுத்து நாளிற்கான நல்ல உடல் மற்றும் மன செயல்திறன் தூக்கத்தால் ஊக்குவிக்கப்படுகிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

நம்மில் பலர் மேற்கூறியவற்றைப் பற்றி அறிந்திருந்தாலும், அது நமக்குப் புதிதல்ல என்றாலும், இரவில் நம் உடலுக்கும் மனதுக்கும் தேவையான ஓய்வைக் கொடுக்க தயங்குகிறோம். நீங்கள் பல காரணங்களை சொல்லலாம், ஆனால் ஆரோக்கியமான உடலை பராமரிக்க அனைவருக்கும் போதுமான அளவு தூக்கம் தேவை என்பது மறுக்க முடியாத உண்மை. ஆரோக்கியமான வாழ்க்கையைப் பெற, மருத்துவர்கள் என்ன அறிவுறுத்துகிறார்கள் என்றால் மக்கள் தங்கள் வாழ்க்கை முறையைத் தேவைக்கேற்ப மாற்றுவதன் மூலமோ அல்லது இரவு 9 முதல் 10 மணிக்குள் உறங்கச் செல்வது போன்ற வேறு ஏதேனும் அத்தியாவசியமான முறையில் அவர்களின் தூக்க முறைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் அவர்கள் இதயமும் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறார்கள்.

# ட்ரக் ஓட்டுனர்களின் மகள்கள் மஹிந்திரா சார்த்தி அபியான் கல்வி உதவித்தொகையை பெறுவார்கள்

சென்னை, செப்டம்பர் 23, 2023: இந்த ஓட்டுனர்களின் தினத்தில் மஹிந்திரா குழுமத்தின் ஒரு அங்கமான மஹிந்திரா ட்ரக் அண்ட் பஸ் டிவிசன் மஹிந்திரா சார்த்தி அபியான் மூலம் டிரக் ஓட்டுநர்களின் மகள்களுக்கு உதவித்தொகையை வழங்கும். இந்தச் சிறுமிகளின் உயர்கல்விக்கான உரிமையை ஆதரிப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கையை மாற்றியமைப்பதில் ஒரு சிறிய பங்களிப்பைச் செய்ய மஹிந்திரா சார்த்தி அபியான் திட்டம் உறுதிபூண்டுள்ளது.




இந்த முயற்சிக்கு முன்னோடியாக இருக்கும் முதல் வணிக வாகன உற்பத்தியாளர்களில் மஹிந்திரா ஒன்றாக இருக்கிறது மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு ரூ.10,000/- உதவித்தொகையுடன் அவர்களின் சாதனையை அங்கீகரிக்கும் ஒரு சான்றிதழுடன் பாராட்டுகிறது. 2014 ஆம் ஆண்டு மஹிந்திரா சார்த்தி அபியான் மூலம் தொடங்கப்பட்ட டிரக் ஓட்டுநர் சமூகத்திற்கான மஹிந்திரா ட்ரக் அண்ட் பஸ் டிவிசன் இன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பில் இந்த முயற்சியானது, மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. இந்தியா முழுவதும் உள்ள 75 க்கும் மேற்பட்ட போக்குவரத்து மையங்களில் தொடர்புகொள்வதன் மூலம் மற்றும் நன்கு வரையறுக்கப்பட்ட, வெளிப்படையான மற்றும் சுயாதீனமான செயல்முறை மூலம் இந்த ஆரம்ப களப்பணி மேற்கொள்ளப்பட்டது. இதுவரை, இந்த முயற்சியின் கீழ் உதவித்தொகைகளின் மூலம் 8928 இளம் சிறுமிகள் ஏற்கனவே பயனடைந்துள்ளனர். இது அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற அவர்களை அனுமதித்துள்ளது.

மஹிந்திரா & மஹிந்திரா லிமிடெட் இன் வர்த்தக வாகனங்கள் பிரிவின் வணிகத் தலைவர் திரு. ஜலஜ் குப்தா இந்த நிகழ்ச்சியில் பேசுகையில், "மஹிந்திரா சார்த்தி அபியான் திட்டம் வணிக வாகன சுற்றுச்சூழல் அமைப்பில் பெண்களுக்கு அதிகாரம் அளிக்க உறுதிபூண்டுள்ளது. மேலும் ஒட்டுநர் சமூகத்தின் வாழ்க்கையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் ட்ரக் ஓட்டுனர்களின் மகள்களுக்கு பெரிய கனவு காணும் வாய்ப்பு மற்றும் அவர்களின் தொழில் இலக்குகளை நோக்கி அவர்கள் உயர தேவையான ஆதரவு ஆகியவற்றை அவர்களுக்கு வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மஹிந்திரா சார்த்தி அபியான், இளம் சிறுமிகள் தங்கள் கனவுகளை அடைய உதவுவதில் அதன் செயல்திறனை வெளிப்படுத்தும் வகையில் எங்கள் ஒட்டுநர்கள் மற்றும் கூட்டாளர்களால் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது ." என்று கூறினார். இந்த உதவித்தொகைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு இளம் சிறுமியையும் நேரடி வங்கி பரிமாற்றம் மூலம் ரூ. 10,000 மற்றும் இந்த சாதனையை அங்கீகரிக்கும் வகையில் ஒரு சான்றிதழ் ஆகியவற்றின் மூலம் பாராட்ட இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது. மஹிந்திரா டிரக் அண்ட் பஸ் லீடர்ஷிப் இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் பிப்ரவரி-மார்ச் 24 இல் நடத்தப்படும் இந்த பாராட்டு விழாவில் டிரக் டிரைவர்களின் மகள்களுக்கு 1100 ஸ்காலர்ஷிப்கள் வழங்கப்படும்.

# என் டி டி டேட்டா பொறியியல் மாணவர்களுக்கான புதிய பயிற்சியுடன் எதிர்கால பணியாளர்களில் முதலீடு செய்கிறது

சென்னை, செப்டம்பர் 23, 2023: டிஜிட்டல் வணிகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகளில் உலகளாவிய முன்னணி நிறுவனமான என் டி டி டேட்டா, சென்னையில் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள புகழ்பெற்ற ஆர்.எம்.கே குரூப் ஆஃப் இன்ஜினியரிங் காலேஜஸ் உடன் இணைந்து மூன்று ஃபுல் ஸ்டாக் கம்ப்யூட்டிங் சென்டர் ஆஃப் எக்ஸலன்ஸ் களை நிறுவியுள்ளது.

அனைத்தையும் உள்ளடக்கிய பயன்பாட்டு மேம்பாட்டில் மாணவர்களின் திறன்களை மேம்படுத்துவது, இந்த என் டி டி டேட்டா ஃபுல் ஸ்டாக் கம்ப்யூட்டிங் சென்டர் ஆஃப் எக்ஸலன்ஸ் இன் முதன்மையான நோக்கமாக இருக்கிறது. மாணவர்கள், எச் டி எம் எல், சி எஸ் எஸ், ஜாவாஸ்கிரிப்ட், பேக்-எண்ட் மொழிகளான பைதான், பி எச் பி மற்றும் ரூபி ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான பயிற்சியைப் பெறுவார்கள், அத்துடன் எஜைல் திட்ட மேலாண்மை மற்றும் அத்தியாவசிய மென் திறன்களில் திறமையை பெறுவார்கள். சி ஒ ஈ இன் ஒரு பகுதியாக, என் டி டி டேட்டா இன் தனியுரிமை பயிற்சி தளம், மாணவர்களுக்கு அணுகக்கூடியதாக மாற்றப்படும். என் டி டி டேட்டா இன் பயிற்சியாளர்கள், விருந்தினர் அமர்வுகளின் போது ஆசிரியர்களை ஈடுபடுத்தி பயிற்சி அளிப்பார்கள்.

"இந்த 245 பில்லியன் டாலர் இந்திய தொழில்நுட்பத் துறை[வீ], தற்போது பொறியியல் பட்டதாரிகளின் ஒரு "வேலை வாய்ப்பு இடைவெளி" ஐக் காண்கிறது." என்று என் டி டி டேட்டா சர்வீசஸ் இன் மூத்த துணைத் தலைவர் நிரஞ்சன் குமார் பகிர்ந்து கொண்டார். "எதிர்கால தொழில்நுட்ப பணியாளர்களுடன் அவர்களின் தடையற்ற ஒருங்கிணைப்பை உறுதி செய்கிற, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சித் தளங்களை அவர்களுக்கு வழங்குவதன் மூலம், திறமைகளை வளர்ப்பதில் என் டி டி டேட்டா உறுதிபூண்டுள்ளது."

ஆர்.எம்.கே பொறியியல் கல்லூரி, ஆர்.எம்.டி. பொறியியல் கல்லூரி மற்றும் ஆர்.எம்.கே பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவை இந்த முயற்சியுடன் தொடர்புடைய மூன்று கல்லூரிகள் ஆகும். இந்த நிறுவனங்கள் நாக் மற்றும் என் பி ஏ இன் ஒரு அங்கீகாரத்தைப் கொண்டுள்ளன. இந்த மூலோபாய கூட்டாண்மையானது தொழில்துறை தேவைகளுக்கு ஏற்ப மாணவர்களின் கல்வியை வளர்ப்பதற்கு இந்த கல்லூரிகள் வசதியாக இருப்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த முயற்சியின் முதல் கட்டமானது, கணினி அறிவியல் பொறியியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் நிபுணத்துவம் பெற்ற மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு பொறியியல் மாணவர்களை மையமாகக் கொண்டு, மூன்று கல்லூரிகளிலும் 500 மாணவர்களை ஈடுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது நாட்டிலேயே என் டி டி டேட்டா இற்கான ஒரு வகையின் முதல் தொழில்-கல்வி சி ஒ ஈ கூட்டாண்மை ஆகும்.

என் டி டி டேட்டா, புதிய தொழில்நுட்பங்கள் பற்றி தொடர்ச்சியான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை நடத்துகிறது மற்றும் சி ஒ ஈ களில் முதலீடு செய்வது எதிர்கால பொறியாளர்களை வடிவமைப்பதில் நிறுவனத்தின் உறுதிப்பாட்டிற்கு ஒரு சான்றாக இருக்கிறது. இந்த கூட்டுமுயற்சியானது, சந்தைப் பற்றாக்குறையைத் தீர்க்கும் அதே வேளையில், தற்போதைய வணிகப் போக்குகளுக்கு ஏற்ப பாடத்திட்டங்களை உருவாக்குவதோடு, பாடத்திட்டங்களை ஆய்வு செய்ய ஒவ்வொரு கல்லூரியுடன் நெருக்கமாக பணியாற்றும். இந்த முன்முயற்சியானது, பயிற்சியாளர் பயிற்சி பட்டறைகள், விருந்தினர் விரிவுரைகள், மாநாடுகள் மற்றும் இ - லேர்னிங் உள்ளிட்ட பல்வேறு கற்றல் திட்டத்தை உள்ளடக்கியது.

மற்றும் ஆர்.எம்.கே. குரூப் ஆஃப் இன்ஸ்டிடியூசன்ஸ் இன் நிறுவனர் தலைவர் வித்யா ரத்னா டாக்டர் ஆர்.எஸ். முனிரத்தினம், மற்றும் துணைத் தலைவர் ஆர். எம். கிஷோர், ஆகியோர், "மாணவர்களுக்கு முழுமையான கல்வியை வழங்குவதற்கான எங்கள் உறுதிப்பாட்டுடன் முழுமையாக ஒத்துப்போகிற இந்த முன்னோடி முயற்சியில், என் டி டி டேட்டா உடன் ஒத்துழைக்க நாங்கள் ஆவலுடன் காத்திருக்கிறோம். புதுமையான கற்றல் மாதிரிகளைப் பின்பற்றுவதற்கு எங்கள் நிறுவனங்களின் ஆயத்தமானது, எங்கள் மாணவர்கள் தொழில்துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அவர்களின் வாழ்க்கையில் சிறந்து விளங்குவதற்கும் நன்கு தயாராக இருப்பதை உறுதி செய்கிறது."என்று கூறினர்.